# 2026 GROUP – II & IIA TEST – 10

## General Studies Tamil Explanations

1. **விடை: C**
   - ➢ மாநில நிர்வாகம் மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையால் மேற்கொள்ளப்படுகிறது.
   - ➢ மாநில ஆளுநர் சட்டமன்றத்தின் ஒரு அங்கமாகத் திகழ்கிறார்.

2. **விடை: B**
   - ➢ குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரை நியமிக்கும் போது மத்திய அமைச்சரவையின்
   - ➢ ஆலோசனையின்படி செயல்படுகிறார்.
   - ➢ மேலும் தொடர்புடைய மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறார்.

3. **விடை: C**
   - ➢ மாநில அரசின் தலைவராக மாநில ஆளுநர் இருப்பார் என இந்திய அரசியலமைப்பு சட்டம் குறிப்பிடுகிறது.
   - ➢ இந்தியக் குடியரசுத் தலைவரால் ஆளுநர் நியமிக்கப்படுகிறார்.

4. **விடை: B**
   - ➢ மாநில ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு, ஒருவர் இந்தியக் குடிமகனாக இருப்பதோடு, 35 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.
   - ➢ மேலும் அவர் நாடாளுமன்றத்திலோ அல்லது மாநில சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது. அவர் ஆதாயம் தரும் எந்தப் பதவியையும் வகித்தல் கூடாது.

5. **விடை: A**
   - ➢ அவர் மாநில அரசின் தலைமை வழக்கறிஞர், மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்வதோடு சில இதர நியமனங்களையும் மேற்கொள்கிறார்.
   - ➢ உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

6. **விடை: B**
   - ➢ மாநிலத்தின் ஆண்டு வரவு செலவுத் திட்டம், ஆளுநரின் முன் அனுமதியுடன் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.
   - ➢ சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா, ஆளுநரின் ஒப்புதலுக்குப் பிறகே சட்டமாகிறது (சில நேர்வுகளில் அவர் ஒப்புதலை ஒத்திவைக்கவோ அல்லது நிறுத்திவைக்கவோ செய்யலாம்).
   - ➢ மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி ஆளுநரின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும்.

7. **விடை: C**
   - ➢ தற்போது, இந்தியாவில் ஆறு மாநிலங்களின் சட்டமன்றத்தில் மட்டுமே சட்ட மேலவை இடம்பெற்றுள்ளது.
   - ➢ அவை பீகார், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா.

SHANKAR IAS ACADEMY

8. **விடை: A**

- ஆளுநர், சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிக்கிறார்.
- முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார்.
- முதலமைச்சரின் பதவிக்காலம் நிலையான ஒன்று அல்ல;
- அவர் சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளவரை முதலமைச்சர் பதவியில் நீடிக்கலாம்.

9. **விடை: C**

- மாநிலத்தில் முதலமைச்சரே உண்மையான நிர்வாக அதிகாரம் கொண்டவர்.
- உயர் பதவி நியமனங்கள் உள்ளிட்ட முக்கிய முடிவுகள், முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.
- ஆளுநர் முறைப்படி அதிகாரிகளை நியமித்தாலும், அவர் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே செயல்படுகிறார்.

10. **விடை: B**

- சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 40க்குக் குறையாமலும், மாநில சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

11. **விடை : C**

- மூன்றில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாவட்ட பஞ்சாயத்து மற்றும் நகராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மேலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

12. **விடை: B**

- பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மற்றொரு பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இடைநிலை பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

13. **விடை: A**

- சட்டமன்ற மேலவை ஒரு நிரந்தர அவையாகும்.
- அதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஓய்வு பெறுவதால், காலியாகும் இடங்களை நிரப்புவதற்கு தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.
- உறுப்பினர்கள் ஆறு வருட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- சட்ட மேலவையின் உறுப்பினராவதற்கு, ஒருவர் இந்தியக் குடிமகனாக இருப்பதோடு, 30 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

14. **விடை: C**

- ஒருவர் எந்த அரசியல் கட்சியையும் சாராதவராக இருந்தாலும் தேர்தலில் போட்டியிடலாம்; அத்தகைய வேட்பாளர் சுயேச்சை வேட்பாளர் என அழைக்கப்படுகிறார்.

SHANKAR IAS ACADEMY

15. **விடை: B**

- அரசியலமைப்பின்படி, ஒரு சட்டமன்றத்தில் 500 உறுப்பினர்களுக்கு மிகாமலும், 60 உறுப்பினர்களுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

16. **விடை: B**

- சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- ஆனால், ஆளுநர் சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பே அதனைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தல்களை நடத்த அழைப்பு விடுக்கலாம்.

17. **விடை: C**

- தேர்தலில் பெரும்பான்மை பெரும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- தமிழ்நாட்டில் 234 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன.
- 118 க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சி ஆளுநரால் ஆட்சி அமைக்க அழைக்கப்படுகிறது.

18. **விடை: C**

- மாநில மாநில சட்டமன்றம் அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினை செலுத்துகிறது.
- மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது.
- அமைச்சரவையின் செயல்பாடுகளில் திருப்தி ஏற்படாவிட்டால் மாநில சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தை இயற்றி அமைச்சரவையை நீக்கம் செய்திடலாம்.

19. **விடை: D**

- மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. நிதி மசோதாவை சட்டமன்றத்தில் மட்டுமே கொண்டுவர இயலும்.
- சட்டமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநில அரசாங்கம் வரியினை விதிக்கவோ, அதிகரிக்கவோ, குறைக்கவோ, விலகிக் கொள்ளவோ இயலாது.
- சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர்.

20. **விடை : D**

- மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் சட்டமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொள்ள முடியாது.
- அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் சட்டமன்றம் பங்கு வகிக்கிறது.

21. **விடை: B**

**செம்மண்:**

- செம்மண், உருமாறியப் பாறைகள் மற்றும் படிகப் பாறைகள் ஆகியவை சிதைவடைவதால் உருவாகிறது.

SHANKAR IAS ACADEMY

- இம்மண்ணில் உள்ள இரும்பு ஆக்சைடு அளவைப் பொருத்து மண்ணின் நிறமானது பழுப்பு முதல் சிகப்பு நிறம் வரை வேறுபடுகிறது.
- இது இம்மண் பொதுவாக அரை வறண்ட பிரதேசங்களில் காணப்படுகிறது.
- இது வளம் குறைந்த மண்ணாக இருப்பதால் தினைப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

22. **விடை: A**

**சரளை மண்**

- சரளை மண் அயனமண்டல பிரதேச காலநிலையில் உருவாகிறது.
- இம்மண் அதிக வெப்பநிலை மற்றும் அதிக மழைப்பொழிவு கொண்ட பகுதிகளில் சுவருதலின் செயலாக்கத்தினால் உருவாவதால் இம்மண் வளம் குறைந்து காணப்படுகிறது.
- இது தேயிலை, காப்பி போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

23. **விடை: C**




24. **விடை: B**

- Climate" என்ற சொல் கிளைமா என்ற பண்டைய கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டதாகும். கிளைமோ "Klimo" என்றால் தமிழில் சாய்வுகோணம் (Inclination) என்று பொருள்.

25. **விடை: D**

- பூமி புவி கோள வடிவமானது. ஆதலால் புவியின் மேற்பரப்பில் சூரியக்கதிர்கள் ஒரே சீராக விழுவது இல்லை.
- புவியின் துருவப் பகுதிகள் சூரியக் கதிர்களை சாய்வாக பெறுகின்றன.
- அதனால் அங்கு சூரிய வெளிச்சம் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருப்பதால் அங்கு மிகக் கடும் குளிர் நிலவுகிறது. பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழுகின்றன.

26. **விடை: A**

- நாட்டு மக்களுக்காக பல்வேறு வகையான விதிகள் மற்றும் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.



SHANKAR IAS ACADEMY

- உதாரணமாக நீங்கள் ஒரு துப்பாக்கியை உரிமம் இல்லாமல் வைத்துக் கொள்ள இயலாது அல்லது சட்டப்படி ஒரு பெண் 18 வயதிற்கு முன்பாகவும் அல்லது ஒரு ஆண் 21 வயதிற்கு முன்பாகவும் திருமணம் செய்து கொள்ள இயலாது. இத்தகைய விதிகளும் சட்டங்களும் சாதாரணமாக இயற்றப்பட்டவை அல்ல.
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இதுபோன்ற சட்டங்களை உருவாக்குவதற்கு முன்பாகக் கவனமாக சிந்தித்து உள்ளது.
- இவை போன்ற பல்வேறு சட்டங்கள் மாநில மற்றும் மத்திய அரசாங்கத்தால் இயற்றப்படுகின்றன.

27. **விடை: D**

- முதலில், மசோதா சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது
- அதன்பிறகு, விவாதங்களும், கருத்துப்பரிமாற்றங்களும் அதன்மீது நடைபெறுகின்றன.
- அதன் பிறகு, அந்த மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுகிறது.
- ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகிறது, அதன் பிறகு அம்மசோதா சட்டமாகிறது.

28. **விடை: C**

- தமிழ்நாட்டின் சட்டமன்றம் சென்னையில் அமைந்துள்ளது.
- ஒரு மாநிலத்தில் சட்டமன்றம் மற்றும் அமைச்சரவை பொதுவாக எங்கு செயல்படுகிறதோ அதுவே மாநிலத்தின் தலைநகரம் ஆகும்.

29. **விடை: D**

- மாநிலத்தில் உயரிய நீதி அமைப்பாக உயர் நீதிமன்றம் விளங்குகிறது. அரசியலமைப்பின் படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு உயர் நீதிமன்றம் இருக்கும்.
- எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களுக்கு பொதுவான ஒரு உயர்நீதிமன்றமும் இருக்கலாம். மாநில உயர்நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும்,
- குடியரசுத் தலைவர் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது நியமனம் செய்யும் இதர நீதிபதிகளையும் கொண்டிருக்கும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை.
- குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியையும், மாநில ஆளுநரையும் கலந்தாலோசித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.

30. **விடை: A**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும.
- உயர் நீதிமன்ற நீதிபதி 62 வயது வரை அப்பதவியில் இருப்பார்.
- உயர்நீதிமன்ற நீதிபதி நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை மற்றும் திறமை இன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவது போன்று நீக்கப்படலாம்.

SHANKAR IAS ACADEMY


[Turn over

31. **விடை: C**

- கல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டையில் முதன்முறையாக உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்டது.
- சர் எலிஜா இம்பே அந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

32. **விடை: C**

- வாரன் ஹேஸ்டிங், சிவில் வழக்குகளை தீர்ப்பதற்காக ஊரக குடிமையியல் நீதிமன்றத்தையும் (Mofussil Diwani Adalat) குற்றவியல் வழக்குகளைத் தீர்ப்பதற்காக ஊரக குற்றவியல் நீதிமன்றத்தையும் நிறுவினார்.
- மேற்கண்ட நீதிமன்றங்களின் மேல்முறையீட்டை விசாரிக்க சதர் திவானி அதாலத் (குடிமையியல் மேல் முறையீட்டு நீதிமன்றம்) சதர் நிசாமத் அதாலத் (குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றம்) ஆகியவை இருந்தன.

33. **விடை: A**

- காரன்வாலிஸ் பிரபு உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி முறையை மறுசீரமைத்தார். காரன்வாலிஸ் ஆட்சியில் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்கள் நீக்கப்பட்டு, கல்கத்தா, டாக்கா, மூர்ஷிதாபாத் மற்றும் பாட்னா ஆகிய இடங்களில் மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
- வில்லியம் பெண்டிங் கால ஆட்சியில் மேற்கண்ட நான்கு மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றங்களும் நீக்கப்பட்டன.

34. **விடை: B**

- 1862-ல் நிறுவப்பட்ட கல்கத்தா உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப் பழமையான உயர் நீதிமன்றமாகும்.
- அலகாபாத் உயர் நீதிமன்றம் மிகப்பெரிய நீதிமன்றமாகும்.

35. **விடை: C**

- 949 ஆம் ஆண்டின் அரசப் பேரவை நீதி வரையறை அதிகார வரம்பு ஒழிப்புச் சட்டத்தின் மூலம் அரசப் பேரவை நீதிவரையறை நீக்கப்பட்டது.

36. **விடை: B**

- இந்திய உச்ச நீதிமன்றம் 28 ஜனவரி 1950 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

37. **விடை: D**

- உச்ச நீதிமன்றத்தின் நடைமுறை மற்றும் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த, அரசியலமைப்பின் சரத்து 145-ன் கீழ் உச்ச நீதிமன்ற விதிகள், 1966 ஆல் உருவாக்கப்பட்டுள்ளன.

38. **விடை: B**

- இந்திய அரசியலமைப்பின் IVவது அத்தியாயமான 'ஒன்றிய நீதித்துறை' என்பதன் கீழ் உள்ள V-யின் படி பகுதி (ஒன்றியம்) மற்றும் VI-ன் கீழ் அத்தியாயமான 'கீழ்நிலை நீதிமன்றங்கள்' என்பதன் கீழ் உள்ள VI-ன் கீழ் பகுதி (மாநிலம்) ஆகியவற்றால் நிறுவப்பட்ட நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் இந்திய உச்ச நீதிமன்றம் ஆகும்.

39. **விடை: C**

- இந்திய அரசியலமைப்பின் 124 முதல் 147 வரையிலான சரத்துகள், இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பை வரையறுக்கின்றன.

40. **விடை: D**

- **குறிப்பிட்ட ஈரப்பதம்** என்பது, ஒரு குறிப்பிட்ட எடைக்கொண்ட காற்றமுள்ள நீராவியின் எடை ஈரப்பதம் எனப்படும்.
- பொதுவாக கிராம் நீராவி/கிலோகிராம் காற்று எனக் குறித்துக் காட்டப்படுகிறது.
- ஓரலகு கன அளவு காற்றில் உள்ள நீராவி நிறை அல்லது எடை **முழுமையான ஈரப்பதம்** ஆகும்.
- இது பொதுவாக ஒரு கன மீட்டர் காற்றில் எவ்வளவு கிராம் நீராவி உள்ளது எனக் குறித்துக் காட்டப்படுகிறது.

41. **விடை: C**

- காற்றின் ஈரப்பதத்தை அளவிட ஈரநிலைமானி (இது ஸ்வன்சன் திரையில் வறண்ட மற்றும் ஈரகுமிழ் கட்டுகள் ஒவ்வொன்றாக அடுக்கப்பட்டதாகும்)

42. **விடை: A**

- கோள் காற்றுகள் - வியாபாரக் காற்றுகள்
- பருவக் காற்றுகள் - பருவக்காலக் காற்றுகள்
- தலக் காற்றுகள் - நிலக்காற்றுகள்
- காற்றின் செங்குத்து இயக்கம் - காற்றோட்டம்

43. **விடை: A**

- பியூபோர்டு அளவுகோல் – காற்றின் வேகத்தை அளவிடுதல்
- காற்றுமானி – காற்றின் திசையை அளவிடுதல்
- காற்று திசைகாட்டி – காற்றின் வேகம்
- மீட்டிரோகிராப் – காற்றின் வேகம், திசை மற்றும் மழைப்பொழிவைப் பதிவு செய்கிறது.

44. **விடை: C**

| நீர் ஆதாரம் | நீரின் கன அளவு (Cubic miles) | மொத்த நீரில் சதவீதம் |
|---|---|---|
| பேராழிகள், கடல்கள், மற்றும் குடாக்கள் | 321,000,000 | 96.54 |
| பனிமலைகள், பனியாறுகள், நிலையான உறைபனி | 5,773,000 | 1.74 |
| நிலத்தடி நீர் | 5,614,000 | 1.69 |
| மண்ணின் ஈரப்பதம் | 3959 | 0.001 |

SHANKAR IAS ACADEMY

| | | |
|---|---|---|
| நிலப்பகுதியில் காணப்படும் நிரந்தர பனிக்கட்டி | 71970 | 0.022 |
| ஏரிகள் | 42320 | 0.013 |
| வளிமண்டலம் | 3095 | 0.001 |
| சதுப்புநில நீர் | 2752 | 0.0008 |
| ஆறுகள் | 509 | 0.0002 |
| உயிரியல் நீர் | 269 | 0.0001 |

45. **விடை: A**

- சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்தை முன்வைத்த முதல் அரசியல் தத்துவஞானி, புகழ்பெற்ற பிரெஞ்சு அறிஞர் மாண்டெஸ்கியூ ஆவார்.
- அரசாங்கத்தின் மூன்று அங்கங்களான சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை அவர் நம்பினார்.

46. **விடை: C**

- **மாவட்ட நீதிமன்றங்கள்:** மாவட்ட அளவில் உரிமையியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிமன்றங்கள் என அழைக்கப்படுகின்றன.
- **அமர்வு நீதிமன்றம்:** குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றம் என அழைக்கப்படுகின்றன.
- **பஞ்சாயத்து நீதிமன்றங்கள்:** கிராம அளவில் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன.
- **வருவாய் நீதிமன்றங்கள்:** நிலப் பதிவேடுகள் தொடர்பான வழக்குகளைக் கையாளுகின்றன. மேலும், அவை நில உரிமையாளர்களிடமிருந்து நில வருவாயை நிர்ணயம் செய்து வசூலிக்கின்றன.

47. **விடை: B**

- லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) என்பது மாற்று தகராறு தீர்வு (ADR) வழிமுறைகளில் ஒன்றாகும்.
- வழக்கமான நீதிமன்றங்களின் சுமையைக் குறைத்து, விரைவான மற்றும் சிக்கனமான நீதியை வழங்குவதற்கான ஒரு மன்றத்தை அளிப்பதற்காக இது நிறுவப்பட்டது.
- சம்பந்தப்பட்ட தரப்பினர் தலைமை அதிகாரிகளுடன் நேரடியாக உரையாட, இந்த நடவடிக்கைகள் முறைசாராதவையாகவும் உள்ளூர் மொழியிலும் நடத்தப்படுகின்றன.
- ஒரு லோக் அதாலத் அமர்வு பொதுவாக, பதவியில் இருக்கும் அல்லது ஓய்வுபெற்ற ஒரு நீதித்துறை அதிகாரியைத் தலைவராகவும், அவருடன் வழக்கமாக ஒரு சட்ட வல்லுநர் (வழக்கறிஞர்) மற்றும் ஒரு சமூக சேவகர் ஆகிய இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.
- லோக் அதாலத்தின் தனித்துவமான அம்சங்களில் ஒன்று, அங்கு சாட்சியச் சட்டமோ அல்லது நடைமுறைச் சட்டங்களோ கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை.
- இது பேச்சுவார்த்தை மற்றும் சமரசத்திற்கான ஒரு களம் என்பதால், சூழலை விரோதமற்றதாகப் பேணுவதற்காக, வழக்கறிஞர்களின் அதிகப்படியான ஈடுபாடோ அல்லது நீண்ட குறுக்கு விசாரணைகளோ தவிர்க்கப்படுகின்றன.



SHANKAR IAS ACADEMY

48. **விடை: A**

- இந்தியாவின் முதல் லோக் அதாலத் 1982-இல் குஜராத் மாநிலம் ஜுனாகத் என்ற இடத்தில் நடைபெற்றது.

49. **விடை: C**

- நீண்ட காலமாக நிலுவையில் உள்ள அமர்வு மற்றும் இதர கீழ்நிலை நீதிமன்ற வழக்குகளைத் தீர்க்கும் நோக்கத்தில், இந்த நீதிமன்றங்கள் 2000-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.
- கிராமப்புற மக்களுக்கு சட்ட உதவியையும் சேவையையும் வழங்குவதற்காக, சட்ட அமைச்சகத்தால் தொலைதூர சட்ட முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.

50. **விடை: B**

- குடும்ப நீதிமன்றங்கள் சட்டம் 1984-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
- தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA), 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் ஆணையங்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
- இ - நீதிமன்றங்கள் திட்டம் (2005)

**முதல் நடமாடும் நீதிமன்றம் (2007)**

- இந்தியாவின் முதல் நடமாடும் நீதிமன்றம் 2007-ஆம் ஆண்டு ஹரியானா மாநிலம், மேவாட் மாவட்டத்தில் உள்ள புன்ஹானா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

51. **விடை: C**

**நீதித்துறை பின்வருவனவற்றுக்கு இடையேயான பிரச்சனைகளைத் தீர்க்கிறது:**

- தகராறு தீர்வு
- நீதித்துறை அமைப்பு, தகராறுகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையை வழங்குகிறது.
  - குடிமகன்
  - குடிமக்களும் அரசாங்கமும்
  - இரண்டு மாநில அரசாங்கம்
  - மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள்

52. **விடை: B**

**நீதித்துறை மறுஆய்வு:**

- நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டம், அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை மீறுவதாக நீதித்துறை கருதினால், அந்தச் சட்டத்தை அரசியலமைப்பிற்கு முரணானது என அறிவிக்கும் அதிகாரம் அதற்கு உண்டு.

53. **விடை: D**

- இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இந்திய அரசியலமைப்பின்படி, உச்ச நீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலராகவும், மிக உயர்ந்த மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் விளங்குகிறது.



SHANKAR IAS ACADEMY

54. **விடை: B**

**முதன்மை அதிகார வரம்பு:**

- ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையேயான அல்லது மாநிலங்களுக்கு இடையேயான நேரடித் தகராறுகளை உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கிறது.

**மேல்முறையீட்டு அதிகார வரம்பு:**

- உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்கிறது.

**ஆலோசனை அதிகார வரம்பு:**

- பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் தனது கருத்தை குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது.

**ஆவணம் நீதிமன்றம்:**

- நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளைப் பராமரிக்கிறது, இதன் தீர்ப்புகள் கீழ் நீதிமன்றங்களுக்குக் கட்டுப்படுத்தும்.

55. **விடை: C**

- கவிஞர் இக்பாலின் கூற்று சமயச்சார்பற்ற கருத்தை விளக்குகிறது:
- “சமயம் நமக்குப் பகைமையைக் போதிக்கவில்லை; நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு!”

56. **விடை: D**

- கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே, அரசானது எந்தவொரு மதப் பிரிவினருக்கு எதிராக குற்றம் சாட்டாது என்று அறிவித்த முதல் மாபெரும் பேரரசர் அசோகர் ஆவார்.
- தனது 12வது பாறைக் கல்வெட்டில், அசோகர் அனைத்து மதப் பிரிவினரிடமும் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் மற்றும், அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

57. **விடை: D**

**சமயச்சார்பற்ற அரசின் சிறப்பியல்புகள்:**

- சுதந்திரக் கோட்பாடு – அரசு எந்தவொரு சமயத்தையும் பின்பற்ற அனுமதிக்கிறது.
- சமத்துவக் கோட்பாடு – அரசு எந்தவொரு சமயத்திற்கும் மற்றொன்றை விட முன்னுரிமை அளிக்காதிருத்தல்.
- நடுநிலைமைக் கோட்பாடு – சமய விவகாரங்களில் அரசு நடுநிலைமை வகித்தல்.

58. **விடை: A**

**சமயச்சார்பின்மையின் முக்கியத்துவம்:**

- இந்தியாவில் அனைத்து சமயங்களையும் சமமாக நடத்துவதே சமயச்சார்பின்மை எனும் கருத்தாக உருவானது.
- பல்வேறு சமயக் கொள்கைகளைக் கொண்ட மக்களிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவதற்கு நமக்கு ஒரு சமயச்சார்பற்ற அரசு தேவைப்படுகிறது.
- சம உரிமைகளை வழங்கும் மக்களாட்சியின் ஒரு பகுதி.
- இது இந்திய அரசியலமைப்பின் ஒரு முக்கிய "அடிப்படை அம்சமாகக்" கருதப்படுவதோடு, பன்மைத்துவ மற்றும் உரிமைகளை மதிக்கும் மக்களாட்சிற்கு இன்றியமையாததாகவும் உள்ளது.

SHANKAR IAS ACADEMY

59. **விடை: B**

- தீன் - இலாஹி - தெய்வீக நம்பிக்கை
- சுல்-இ-குல் - சமயங்களுக்கிடையே அமைதியும் நல்லிணக்கமும்
- சரத்து 26 - சமய விவகாரங்களை நிர்வகிப்பதற்கான சுதந்திரம்
- சரத்து 27 - எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்த வேண்டியதில்லை.

60. **விடை: D**

- சரத்து 28 – குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சமய போதனைகளைத் தடுத்தல்.
- சரத்து 29 (2) – அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பாகுபாடு காட்டுவதற்கான தடை
- சரத்து 16 – பொது வேலைவாய்ப்பில் சமமான வாய்ப்பு.
- சரத்து 25 (1) – எந்தவொரு சமயத்தையும் பின்பற்றும் மற்றும் பரப்பும் சுதந்திரம்

61. **விடை: A**

- 1950-இல் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, 'சமயச்சார்பின்மை' என்ற வார்த்தை அதில் இடம்பெறவில்லை.
- இந்திய அரசியலமைப்பின் 42-வது திருத்தச் சட்டம், 1976-ஆம் ஆண்டில் 'சமயச்சார்பற்ற' என்ற சொல் முகவுரையில் சேர்க்கப்பட்டது.

62. **விடை: A**

- இந்தியா ஒரு இறையாண்மை கொண்ட, சமதர்ம, சமயச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடாகும்.

63. **விடை: C**

- தனிமனித கண்ணியத்துடன் தேசத்தின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் மேம்படுத்துவதே நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கமாகும்.
- இந்தியாவில் அரசுக்கென்று எந்தவொரு மதமும் இல்லை.
- அரசு தனக்கென ஒரு மதத்தை நிறுவாது; எந்தவொரு குறிப்பிட்ட மதத்திற்கும் சிறப்பு ஆதரவை வழங்காது.

64. **விடை: B**

- இந்திய அரசியலமைப்பின் கீழ் உறுதிசெய்யப்பட்ட சமயச் சுதந்திரம் அதன் குடிமக்களுக்கு மட்டுமானதல்ல, மாறாக வெளிநாட்டினருக்கும் பொருந்தும்.
- 1954-ல் ரதிலால் பஞ்சந்த் எதிர் பம்பாய் மாநிலம் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

65. **விடை: C**

- பேரிடர் என்பது, வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வாகும். இது பெரும் சேதத்தையும் உயிர் இழப்பையும் ஏற்படுத்துவதோடு, மற்றவர்களின் உதவியையும் எதிர்பார்க்க நேரிடும்.
- பேரழிவு என்பது, இது ஒரு மிகப்பெரிய அளவிலான பேரிடர் ஆகும். இதிலிருந்து மீண்டு வர நீண்ட காலமும், அதிகப்படியான நிதிச் செலவும் தேவைப்படும்.

SHANKAR IAS ACADEMY

66. **விடை: D**

- நிலநடுக்கங்கள், வெள்ளப்பெருக்கு, சூறாவளிப் புயல்கள், வறட்சி, நிலச்சரிவுகள், சுனாமிகள் மற்றும் எரிமலை வெடிப்புகள் ஆகியவை இயற்கை இடர்களின் முக்கிய எடுத்துக்காட்டுகளாகும்.

67. **விடை: B**

**வளி மண்டலத்தால் ஏற்படும் இடர்கள்**

- வெப்ப மண்டல சூறாவளி இடியுடன் கூடிய புயல், மின்னல், சுழல் காற்று, பனிச்சரிவு, வெப்ப அலைகள், மூடுபனி மற்றும் காட்டுத்தீ ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள்.

**நிலவியல் சார்ந்த இடர்கள்**

- நில அதிர்வு, சுனாமி, நிலச்சரிவு, நிலம் அமிழ்தல் ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள்.

**நீரியல் தொடர்பான இடர்கள்**

- வெள்ளப்பெருக்கு, வறட்சி, கடற்கரை அரிப்பு, சூறாவளி அலைகள் ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள்.

**சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள்**

- மண், காற்று, நீர் மாசடைதல், பாலைவனமாதல், புவி வெப்பமடைதல் மற்றும் காடுகள் அழிப்பு போன்றவற்றால் ஏற்படும் இடர்கள்.

68. **விடை: D**

- தொழில்நுட்பம் சார்ந்த இடர்கள்: அபாயகரமான கழிவுப் பொருள்களால் ஏற்படும் இடர்கள், தீவிபத்து மற்றும் கட்டமைப்பு குறைபாடுகளால் ஏற்படும் இடர்கள் (பாலங்கள், சுரங்கங்கள், அணைகள், அணுக்கதிர்கள் மற்றும் கதிரியக்க விபத்துகள்).
- மனித தூண்டுதலால் ஏற்படும் இடர்கள்: தீவிரவாதம், குண்டு வெடிப்பு, போக்குவரத்து விபத்துகள், போர் மற்றும் உள்நாட்டுக் கலவரம் ஆகியவற்றால் ஏற்படும் இடர்கள்.

69. **விடை: D**

- ஒரு பகுதியினுடைய நிலவியல் அமைப்பு, கடந்த காலங்களில் ஏற்பட்ட நில அதிர்வு, அதிர்வலைகளின் தன்மைகள் ஆகியவற்றை அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நில அதிர்வு மண்டலங்கள் கண்டறியப்படுகின்றன.
- இதனடிப்படையில் இந்திய தரநிர்ணய நிறுவனம் இந்தியாவை நான்கு நில அதிர்வு மண்டலங்களாக வகைப்படுத்தியுள்ளது: மண்டலம் II, மண்டலம் III, மண்டலம் IV மற்றும் மண்டலம் V (இந்தியாவின் எப்பகுதியும் மண்டலம் I-இன் கீழ் வகைப்படுத்தப்படவில்லை).

70. **விடை: C**

**இந்திய அரசியலமைப்புப் பின்வரும் தனிச் சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது:**

- அரசானது எந்த ஒரு சமயத்தாலும் தன்னை அடையாளம் காணாது அல்லது சமயத்தால் கட்டுப்படுத்தப் படாததாகவும் இருக்கும்.
- ஒவ்வொருவரும் அவரது விருப்பத்திற்கேற்ப எந்த ஒரு சமயத்தைப் பின்பற்றும் உரிமையை அரசு உறுதிசெய்கிறது.
- எந்தச் சமயத்திற்கும் அரசு முன்னுரிமை சலுகை அளிப்பதில்லை.
- எந்த ஒரு நபருக்கும் அவரது சமய நம்பிக்கையின் காரணமாக அரசு எவ்வித பாகுபாடும் காட்டாது.



SHANKAR IAS ACADEMY

71. **விடை: D**

**குடியுரிமையின் வகைகள், குடியுரிமை இரண்டு வகைப்படும்:**

- இயற்கை குடியுரிமை: பிறப்பால் பெறக்கூடிய குடியுரிமை.
- இயல்புக் குடியுரிமை: இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை.

72. **விடை: C**

- **1955ஆம் ஆண்டு இந்தியக் குடியுரிமைச் சட்டம் குடியுரிமை பெறுவதற்கான ஐந்து வழிமுறைகளைப் பரிந்துரைக்கிறது. அவையாவன:**
  - பிறப்பால் குடியுரிமை பெறுதல்
  - வம்சாவளியால் குடியுரிமை பெறுதல்
  - பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்
  - இயல்புக் குடியுரிமை
  - பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

73. **விடை: D**

- **இயல்புக் குடியுரிமை:** வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்பு குடியுரிமை வழங்கப்படுகிறது.
- **ஒற்றைக் குடியுரிமை:** இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது. (அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படுகிறது, ஆனால் இந்தியாவில் ஒற்றைக் குடியுரிமை மட்டுமே நடைமுறையில் உள்ளது).

74. **விடை: C**

- அண்டார்டிகாவில் அமைக்கப்பட்ட முதல் இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம் தட்சின் கங்கோத்ரி ஆகும்.

75. **விடை: A**

**அரோரா (விண்ணொளி)**

- வட மற்றும் தென் காந்த துருவங்களுக்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை அரோரா என்று அழைக்கப்படுகிறது.
- இவ்விளைவானது சூரியனிலிருந்து வரும் மின்னூட்ட துகள்கள் வளிமண்டல மேலடுக்கிலுள்ள அணுக்களுடன் வினைப்புரிவதால் உண்டாகிறது.
- இது தென்துருவத்தில் அரோரா ஆஸ்ட்ராலிஸ் அல்லது தென்துருவ ஜோதி எனவும், வட துருவத்தில் அரோரா பொரியாலிஸ் அல்லது வடதுருவ ஜோதி எனவும் அழைக்கப்படுகிறது.

76. **விடை: D**

- நீர்ச்சந்தி: இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை இணைக்கும் ஒரு குறுகிய நீர் பகுதி மற்றும் இரு நிலப்பரப்புகளைப் பிரிப்பது.
- நிலச்சந்தி: இரு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கும் ஒரு குறுகிய பகுதி மற்றும் இரு நீர் பகுதியைப் பிரிப்பது.



SHANKAR IAS ACADEMY

77. **விடை: B**

- ஆப்பிரிக்கா - 'தாய் கண்டம்': புவியில் மனித இனங்கள் வாழ்ந்த பழமையான கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது 'தாய் கண்டம்' எனப் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.
- கலாச்சார பன்முகத்தன்மை: இக்கண்டத்தில் நிலவும் பல்வகை புவியியல் சூழல்கள் பல்வேறு மனித இனக் குழுக்களுக்கும் பன்முக கலாச்சாரத்திற்கும் முதன்மையான காரணமாக உள்ளன.
- மனித இனத்தின் பிறப்பிடம்: ஆப்பிரிக்காவில் மனிதனின் மூதாதையர்கள் 5 மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக ஆதாரங்கள் மூலம் தெரியவருகிறது. இதனால் இது மனித இனத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது.

78. **விடை: C**

- பருத்தி நெசவாலை தொழிலுக்குக் குளிர் - ஈரப்பத கால நிலை சிறந்ததாகும்.
- எனவே, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளில் இவ்வகையான காலநிலை நிலவுவதால் பருத்தி நெசவு தொழிலகங்கள் இம்மண்டலத்தில் அமைந்துள்ளன.

79. **விடை: B**

- மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக ஓர் ஆணையத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கமான பொருளாதார மற்றும் சமூக சபை அதிகாரம் பெற்றது.

80. **விடை: D**

- இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் நிறுவப்பட்டது.
- இது சுதந்திரமான, சட்டப்பூர்வமான, அரசியலமைப்பு சாராத ஓர் அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது. தலைவரையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் (அ) 70 வயது வரை இதில் எது முன்னதாக வருகிறதோ அதுவரை பதவியில் நீடிப்பார்.

81. **விடை: C**

**மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC)**

- தமிழ்நாட்டில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் 17இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இது மாநில அளவில் செயல்படுகிறது.
- இது ஒரு தலைவர் உட்பட்ட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியது.

82. **விடை: B**

- சரத்து 23: மனிதக் கடத்தல் மற்றும் கட்டாயத் தொழிலாளர் முறையைத் தடை செய்தல்.
- சரத்து 24: குழந்தை தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது.
- சரத்து 39 (f): ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகை செய்கிறது.
- சரத்து 45: 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.


SHANKAR IAS ACADEMY

83. **விடை: D**
- 1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு
- 1979 – சர்வதேச குழந்தைகள் ஆண்டு
- 1989 – குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு
- 1995 – நான்காவது உலக மகளிர் மாநாடு

84. **விடை: C**

**குழந்தைத் தொழிலாளர் சட்டம் (தடை மற்றும் சீரமைப்புச் சட்டம், 1986):**
- இது 15 வயது பூர்த்தியடையாத எந்த ஒரு குழந்தையையும் வேலைக்கு அமர்த்த தடை செய்கிறது.

85. **விடை: B**
- சிறார் நீதிச்சட்டம், 2000 (குழந்தை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு): இச்சட்டம் குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான வழிமுறைகளை வழங்குவதுடன், அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு குறித்த ஆலோசனைகளை வழங்குவதையும் வலியுறுத்துகிறது.
- போக்ஸோ (POCSO) சட்டம், 2012: பாலியல் குற்றவாளிகளைத் தண்டிக்கவும், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்பொடுமைகளைத் தடுக்கவும் இச்சட்டம் உருவாக்கப்பட்டது.
- பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலவாழ்வுச் சட்டம், 2007: இச்சட்டம் மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர்களுக்கும் பராமரிப்பினை வழங்குவதை அவர்களின் குழந்தைகள் மற்றும் வாரிசுதாரர்களின் சட்டப்பூர்வமான கடமையாக்குகிறது.
- குடும்ப வன்கொடுமையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம்-2005: இச்சட்டம் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் துன்புறுத்தப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது.

86. **விடை: D**
- 1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்: இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணிநேர கட்டணமில்லா அவசரத் தொலைத்தொடர்பு சேவையாகும்.
- குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்பொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்புக்கவனம் செலுத்தப்படுகிறது.

87. **விடை: A**
- இந்து வாரிசு சட்டம், 1956: பெண்கள் தங்கள் பெற்றோர்களின் சொத்தினை மரபுவழியாக பெறுவதை உறுதிசெய்கிறது.
- வரதட்சணைத் தடைச் சட்டம், 1961: வரதட்சணை என்ற பெயரில் மருமகளை மோசமாக நடத்துவதற்கு கடுமையான தண்டனை வழங்குகிறது.
- பெண்களைக் கேலி செய்வதற்கு எதிரானச் சட்டம், 1997: பெண்களுக்கு நிவாரணம் அளிக்கிறது.
- அநாகரிகமாக சித்தரித்தலுக்கெதிரான சட்டம், 1999: பத்திரிகைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் பெண்களை அநாகரிகமாக சித்தரித்தலைத் தடைசெய்கிறது.

SHANKAR IAS ACADEMY

88. **விடை: C**

- BSF (Border Security Force): எல்லைப் பாதுகாப்புப் படை.
- CRPF (Central Reserve Police Force): மத்திய ரிசர்வ் காவல் படை.
- ITBP (Indo-Tibetan Border Police): இந்தோ – திபெத்திய எல்லைக் காவல்.
- CISF (Central Industrial Security Force): மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படை.
- SSB (Sashastra Seema Bal): சிறப்பு சேவை பணியகம் அல்லது சாஷாஸ்திர சீமா பால்.

89. **விடை: D**

- இந்தியக் கடலோரக் காவல்படை: இந்தியப் நாடாளுமன்றத்தின் 1978ஆம் ஆண்டு கடலோரக் காவல் படைச் சட்டத்தின்படி, இந்தியாவின் சுதந்திர ஆயுதப் படையாக இந்தியக் கடலோரக் காவல்படை 1978இல் நிறுவப்பட்டது.
- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

90. **விடை: C**

- இது அஸ்ஸாம் பகுதியில் 1835ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது.
- இது கச்ஸார் லெவி எனப்பட்ட குடிப்படை (இராணுவ பயிற்சி பெற்ற மக்கள் குழு) ஆகும்.
- தற்போது இதில் 46 படைப்பிரிவுகள் உள்ளன.
- இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

91. **விடை: A**

- ஜனவரி 15 - ராணுவ தினம்
- பிப்ரவரி 1 - கடலோரக் காவல்ப் படை தினம்
- மார்ச் 10 - மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை தினம்
- அக்டோபர் 7 - விரைவு அதிரடிப் படை தினம்
- அக்டோபர் 8 - விமானப்படை தினம்
- டிசம்பர் 4 - கடற்படை தினம்
- டிசம்பர் 7 - ஆயுதப் படைகளின் கொடி தினம்

92. **விடை: B**

**பஞ்சசீலம்**

- **இந்தக் கொள்கைகளில் பின்வருவன அடங்கும்**
  - ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்
  - பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
  - பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
  - பரஸ்பர நலனுக்ககாக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
  - அமைதியாக இணைந்திருத்தல்.

SHANKAR IAS ACADEMY

93. **விடை: C**

- ➢ அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் மிக முக்கிய அம்சமாக விளங்குகிறது.
- ➢ இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உருவான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் தலைமையிலான இராணுவக் கூட்டில் இணையாமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலே அணி சேராதிருப்பத்தின் நோக்கம் ஆகும்.
- ➢ அணிசேராமை என்பது நடுநிலைமையும் அல்ல, ஈடுபாடின்மையும் அல்ல.
- ➢ அணிசேராமை என்பது எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் (அமெரிக்கா, ரஷ்யா) சேராமல் சர்வதேசப் பிரச்சினைகளில் சுதந்திரமாகத் தீர்மானிக்கும் நிலைப்பாட்டைக் குறிக்கும்.

94. **விடை: D**

**சார்க் (SAARC)**

- ➢ இந்தியா பிராந்திய ஒத்துழைப்பில் நம்பிக்கை கொண்டுள்ளது.
- ➢ சகோதரத்துவப் பிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் அமைதியான முறையில் இணைந்திருத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக சார்க் (தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு) ஏற்படுத்தப்பட்டது.
- ➢ இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகள் சார்க் அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளன.

95. **விடை: B**

- ➢ மோட்டார் வாகனச் சட்டம், 1988.
- ➢ தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1989.

96. **விடை: D**

- ➢ புதுச்சேரி இந்தியாவின் ஒரு பகுதியாக இணைந்தபோது, இந்திய அரசாங்கம் 1962ஆம் ஆண்டு பாண்டிச்சேரி (குடியுரிமை) ஆணையை வழங்கியது.

97. **விடை: A**

- ➢ மெட்ராஸ் ரெஜிமென்ட் என்பது இந்திய இராணுவத்தின் பழமையான காலாட்படைப் பிரிவுகளில் ஒன்றாகும்.
- ➢ இதன் பயிற்சி மையமானது தமிழ்நாட்டில் உள்ள உதகமண்டலத்தில் (ஊட்டி) உள்ள வெலிங்டனில் அமைந்துள்ளது (சென்னையில் அல்ல).

98. **விடை: C**

- ➢ இந்தியக் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவர் மற்றும் நமது பாதுகாப்பு அமைப்பின் மிக உயர்ந்த பதவியை வகிக்கிறார்.
- ➢ அவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ஆவார்.

SHANKAR IAS ACADEMY

99. **விடை: D**

- தீப்பாறைகள் உருகிய பாறைக் குழம்பு குளிர்ந்து இறுகுவதன் மூலம் உருவாகின்றன.
- மற்ற எல்லாப் பாறைகளும் இந்தப் பாறைகளிலிருந்து உருவாவதால், இவை 'முதன்மைப் பாறைகள்' அல்லது 'தாய்ப் பாறைகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

100. **விடை: C**

- 'தீ' என்று பொருள்படும் லத்தீன் வார்த்தையான' இக்னியஸ்' என்பதிலிருந்து 'இக்னியஸ்' என்ற சொல் பெறப்பட்டது.

101. **விடை: A**

**தீப்பாறைகளின் பண்புகள்:**

- இந்தப் பாறைகள் கடினத் தன்மை உடையவை.
- இவை நீர்புகாத் தன்மைக் கொண்டவை.
- உயிரினப் படிமப்பொருள்கள் (Fossils) இப்பாறைகளில் இருக்காது.
- தீப்பாறைகள் எரிமலை செயல்பாடுகளோடு தொடர்புடையவை.
- இப்பாறைகள் கட்டுமான வேலைகளுக்குப் பயன்படுகின்றன.

102. **விடை: C**

- புவியின் உட்பகுதியில் இருந்து அதன் மேல் பகுதிக்கு வரும் செந்நிற, உருகிய பாறைக் குழம்பு 'லாவா' (LAVA) எனப்படும்.
- பாறைக் குழம்பு புவியின் மேற்பரப்பிற்கு வந்தவுடன் குளிர்ந்து பாறைகளாக மாறுகிறது.
- இவ்வாறு புவி மேலோட்டின் மேற்பரப்பில் உருவாகும் பாறைகள் “வெளிப்புறத் தீப்பாறைகள்” என்று அழைக்கப்படுகிறது.
- இப்பாறைகள் விரைவாக குளிர்வதால் மெல்லிழைகள் மற்றும் கண்ணாடி தன்மை கொண்டதாக இருக்கும்.
- இந்தியாவின் வடமேற்கு தீபகற்ப பகுதிகளில் காணப்படும் கருங்கல் (Basalt) வகை பாறைகள் வெளிப்புறத் தீப்பாறைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

103. **விடை: B**

- பூமியின் மேற்பரப்பிற்குக் கீழே உருவாகும் தீப்பாறைகள், ஊடுருவிய தீப்பாறைகள் என அழைக்கப்படுகின்றன.
- இவை, அவற்றின் உருவாக்க ஆழத்தின் அடிப்படையில் மேலும் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன:
  - அடியாழப் பாறைகள்: பெரும் ஆழங்களில் உருவாகின்றன (எ.கா., கிரானைட்). மெதுவாகக் குளிர்வதால் இவற்றில் பெரிய படிகங்கள் உள்ளன.
  - இடையாழப் பாறைகள்: இவை விரிசல்கள் அல்லது பிளவுகளில் ஆழம் குறைந்த பகுதிகளில் உருவாகின்றன (எ.கா., டையோரைட் மற்றும் கேப்ரோ ஆகியவை உண்மையில் புளூட்டோனிக் பாறைகளுக்கு (ஆழத்தில் அமைந்தவை) எடுத்துக்காட்டுகள் ஆகும்).

SHANKAR IAS ACADEMY

104. **விடை: D**

- இடையாழப் பாறைகள் - டொலிரைட்
- உயிரினப் படிவுப் பாறைகள் - சாக்
- பௌதீக படிவுப் பாறைகள் - மணற்பாறைகள்
- இரசாயன படிவுப் பாறைகள் - ஜிப்சம்

105. **விடை: A**

- செடிமென்டரி (sedimentary) என்ற சொல் 'செடிமென்டம்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டது.
- அதன் பொருள் படியவைத்தல் என்பதாகும்.
- படிவுப் பாறைகள் பல்வேறு அரிப்பு காரணிகளால் அரிக்கப்பட்டு படிய வைக்கப்பட்ட படிவுகளிலிருந்து உருவாகின்றன
- நீண்ட காலமாக அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தின் காரணமாக இறுகியதால் படிவுப் பாறைகள் உருவாகின்றன.

106. **விடை: C**

- படிவுப் பாறைகள் நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு போன்ற இயற்கை வளங்கள் உருவாக முக்கிய ஆதாரமாகும்

107. **விடை: D**

**படிவுப் பாறைகளின் பண்புகள்:**

- இப்பாறைகள் பல அடுக்குகளைக் கொண்டது.
- இப்பாறைகள் படிகங்களற்ற பாறைகளாக உள்ளது.
- இப்பாறைகளில் உயிரின படிமங்கள் (Fossil) உள்ளன.
- இப்பாறைகள் மென் தன்மையுடையதால் எளிதில் அரிப்புக்கு இவை உட்படுகின்றன.

108. **விடை: C**

- மெட்டமார்பிக் என்ற வார்த்தை இரண்டு கிரேக்க சொல்லான மெட்டா (Meta) மற்றும் மார்பா (Morpha) என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டதாகும். மெட்டா என்பது 'மாற்றம்' என்றும், மார்பா என்பது 'வடிவம்' என்றும் பொருள்படும்.
- அதிகவெப்ப அழுத்தம் காரணமாக தீப்பாறைகளும் படிவுப்பாறைகளும் மாற்றமடைந்து உருமாறிய பாறைகள் என பெயர் பெறுகிறது.

109. **விடை: D**

- ஆளுநர் பெயரளவிலான (அரசியலமைப்பு) நிர்வாகி என்று அழைக்கப்படுகிறார், ஏனெனில் உண்மையான நிர்வாக அதிகாரம் அமைச்சர்கள் குழுவால் செயல்படுத்தப்படுகிறது.
- அரசியலமைப்பு விதிகளின்படி, அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.
- ஆளுநர் முதலமைச்சரை நியமிப்பதோடு, முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் அமைச்சரவையையும் நியமிக்கிறார்.
- ஆனால் ஆளுநர் எப்போதும் பெயரளவிலான நிர்வாகியாக இருப்பதில்லை.

SHANKAR IAS ACADEMY

110. **விடை: B**

- ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் சரத்து 356-ன் கீழ் ஒரு மாநிலத்தில் அவசரநிலையை அமல்படுத்துகிறார்.

111. **விடை: D**

- பெரும்பாலான மாநிலங்களில், ஆளுநர் மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராகப் பணியாற்றி, முக்கிய கல்விசார் நியமனங்களை மேற்பார்வையிடுகிறார்.
- மாநில சட்டமன்றத்தின் அமர்வுகளைக் கூட்டவும் (அழைக்கவும்) மற்றும் ஒத்திவைக்கவும் (முடிவுக்குக் கொண்டுவரவும்) ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.
- ஆளுநர், பொதுவாக அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில், சட்டமன்றத்தைக் கலைக்கலாம்.

112. **விடை: A**

- மாநில சட்டமன்றத்தில் ஒரு நிதி மசோதாவை அறிமுகப்படுத்துவதற்கு முன் ஆளுநரின் பரிந்துரை தேவை.
- சட்டமன்றம் கூட்டத்தொடரில் இல்லாதபோதும், அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உண்டு.

113. **விடை: D**

- ஆளுநர், சட்டமன்றப் பேரவையின் மொத்த உறுப்பினர்களில் ஆறில் ஒரு பங்கை நியமிக்கிறார்.
- அறிவியல், இலக்கியம், கலைகள், சமூக சேவை மற்றும் கூட்டுறவு இயக்கம் போன்ற துறைகளில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள நபர்களிலிருந்து இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

114. **விடை: B**

- பாறைக்குழம்பு பாறைகளில் ஊடுருவி செல்லும் போது அப்பாறைக்குழம்பின் வெப்பம், அங்குள்ள பாறைகளை உருமாற்றம் செய்து விடுகிறது. இது வெப்ப உருமாற்றம் எனப்படும்.
- பாறைக்குழம்பு பாறைகளில் ஊடுருவிச் செல்லும் போது அப்பாறைக் குழம்பின் அழுத்தத்தால், அங்குள்ள பாறைகளை உருமாற்றம் செய்துவிடுகிறது. இது இயக்க உருமாற்றம் எனப்படும்.

115. **விடை: D**

- **கிரானைட் → நைஸ்:** கிரானைட், இயக்க உருமாற்றத்திற்கு உட்பட்டு நைஸாக மாறுகிறது.
- **கருங்கல் → ஸ்கிஸ்ட்:** வெப்ப உருமாற்றத்தின் காரணமாக கருங்கல், பலகைப் பாறையாக மாறுகிறது (கொடுக்கப்பட்டுள்ளபடி).
- **மணற்பாறை → வெண்கற்பாறை:** வெப்ப உருமாற்றத்தின் கீழ் மணற்பாறை வெண்கற்பாறையாக மாறுகிறது.
- **மாக்கல் → பலகைப் பாறை:** வெப்ப உருமாற்றத்தின் காரணமாக மாக்கல், பலகைப் பாறையாக மாறுகிறது.

SHANKAR IAS ACADEMY

116. **விடை: B**

- மண்ணின் அடிப்படைக் கூறுகள் கனிமம், கரிமப் பொருள், நீர் மற்றும் காற்று ஆகும். இது ஏறத்தாழ கொண்டுள்ளது
    - 45% கனிமம்,
    - 5% கரிமப் பொருள்,
    - 25% நீர் மற்றும் 25% காற்று.
    - இது ஒரு பொதுவான உண்மை மட்டுமே.
    - மண்ணின் கலவையானது இடத்திற்கு இடம் மற்றும் காலத்திற்கு காலம் மாறுபடும்.

117. **விடை: A**

- இந்த மண் ஆற்றுச் சமவெளிகள், வெள்ளச் சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகளில் காணப்படுகிறது.
- இவை ஓடும் நீரின் மூலம் கடத்தப்படும் நுண்ணிய துகள்களால் படிய வைக்கப்பட்டு உருவாகிறது. இது மற்ற மண் வகைகளைக் காட்டிலும் வளம்மிக்கது.
- இது நெல், கரும்பு, கோதுமை, சணல் மற்றும் மற்ற உணவுப் பயிர்கள் பயிரிட ஏற்றது.

118. **விடை: C**

- இந்த மண் வகைகள் தீப்பாறைகளின் சிதைவினால் உருவாகின்றன.
- கரிசல் மண் களிமண் தன்மை கொண்டது.
- இது ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது.
- இது பருத்தி வளர்ப்பதற்கு மிகவும் உகந்தது.

119. **விடை: D**

**வானிலை மற்றும் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகள்**

- சூரியக் கதிர்களின் படுகோணம்
- சூரிய ஒளிபடும் நேரம், நீளம், உயரம்,
- நிலம் மற்றும் நீர்நிலைகளின் பரவல்,
- மலைத்தொடர்களின் அமைவிடம் மற்றும் திசை, காற்று அழுத்தம்,
- காற்றும் கடல் நீரோட்டங்களும் ஒரு பிரதேசத்தின் வானிலை மற்றும் காலநிலையைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாகும்.

120. **விடை: C**

- ஐசோதெர்ம் என்பது சம வெப்பக்கோடு.
- ஐசோக்ரைம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான மிகக் குறைந்த சராசரி வெப்பநிலையாகும்.
- ஐசோகெல் என்பது சம சூரிய வெளிச்சக் கோடு.
- ஐசெல்லோபார் என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒத்த மாற்றங்களைக் காட்டும் சம காற்றழுத்த மாறுபாட்டுக் கோடு.
- ஐசோபார் சம காற்றழுத்தக் கோடு
- ஐசோஹைட்ஸ் என்பது சம அளவு மழைப்பொழிவைக் குறிக்கிறது.

SHANKAR IAS ACADEMY

121. **விடை: D**

➢ **வெப்பநிலையின் தாக்கங்கள்:**
- ஈரப்பதத்தின் அளவு,
- ஆவியாதல் செயல்முறை,
- திரவமாதல் மற்றும் மழைப்பொழிவு.

122. **விடை: B**

➢ சூரியக் கதிர்வீச்சிலிருந்து வரும் வெப்ப ஆற்றலை பூமி மூன்று வழிமுறைகள் மூலம் பெறுகிறது.

➢ அவை கதிர்வீச்சு, வெப்பக்கடத்தல் மற்றும் வெப்பச்சலனம் ஆகும்.

➢ பூமியின் வளிமண்டலம் சூரியக் கதிர்வீச்சை விட புவிசார் கதிர்வீச்சாலேயே அதிகமாக வெப்பமடைகிறது.

➢ வெப்பநிலை கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் மாறுபடுகிறது.

123. **விடை: C**

➢ சூரியக் கதிர்வீச்சு மூலம் பூமி பெறும் ஆற்றல், வெளியேறும் கதிர்வீச்சாக இழக்கப்படுகிறது.

➢ பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை, வளிமண்டலம் முக்கியமாக வெளியேறும் கதிர்வீச்சால் வெப்பமடைகிறது.

➢ எனவே, அதிகபட்ச வெப்பநிலை வழக்கமாக பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை பதிவாகிறது மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை சூரிய உதயத்திற்கு முன்பு அதிகாலை 4 மணியளவில் பதிவாகிறது.

124. **விடை: B**

➢ அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் பிற நோக்கங்களுக்காகவும், ஆட்கொணர்வு, கட்டளையுறுத்தும், தடையுறுத்தும், ஆவணக் கேட்பு நீதிப்பேராணை மற்றும் தகுதி வினவும் ஆணை ஆகியவற்றை பிறப்பிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

125. **விடை: C**

➢ இராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களைத் தவிர, ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது அதிகார வரம்பிற்குள் உள்ள அனைத்து கீழ் நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் மீதும் பொதுவான மேற்பார்வை அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

126. **விடை: B**

➢ துக்ளக் காலத்தில் சிவில் நடைமுறைச் சட்டம் தொகுக்கப்பட்டது. அது ஃபிக்ஹா -இ -ஃபெரோஸ் ஷாஹி என்று அழைக்கப்பட்டது.

127. **விடை: A**

➢ இந்தியத் தொகுக்கப்பட்ட பொதுச் சட்டத்தின் தொடக்கமானது, 1727-ஆம் ஆண்டில் (1726-ஆம் ஆண்டு சாசனத்தின் கீழ்) கிழக்கிந்திய கம்பெனியால் சென்னை, பம்பாய் மற்றும் கல்கத்தாவில் மேயர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டபோது கண்டறியப்படுகிறது.



SHANKAR IAS ACADEMY

128. **விடை: D**

- **கல்கத்தா உச்ச நீதிமன்றம்:** 1773 ஆம் ஆண்டின் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ், 1774 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதி நிறுவப்பட்டது.
- **சென்னை உச்ச நீதிமன்றம்:** 1801-ல் நிறுவப்பட்டது (1800-ல் சாசனம் வழங்கப்பட்டது).
- **பம்பாய் உச்ச நீதிமன்றம்:** 1824 ஆம் ஆண்டு மே 8 ஆம் தேதி நிறுவப்பட்டது (1823 இல் சாசனம் வழங்கப்பட்டது).
- **உயர் நீதிமன்றம் (கல்கத்தா, சென்னை, பம்பாய்):** 1861 ஆம் ஆண்டின் இந்திய உயர் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் 1862 இல் நிறுவப்பட்டது.

129. **விடை: D**

- இது கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியாகும்.
- இந்தப் பகுதி சூரியனின் நேரடிக் கதிர்களைப் பெறுவதோடு, சூரியனிடமிருந்து அதிகபட்ச வெப்பத்தையும் பெறுகிறது.
- இந்த மண்டலம், வெப்பமண்டலம் அல்லது அயனமண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

130. **விடை: A**

- நீர்சுழற்சியின் முக்கிய கூறு மழையாகும். இது புவியில் நன்னீரை உருவாக்குகின்றது.
- மழைநீரே எல்லாவகையான நீருக்கும் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது.
- வெப்ப நிலை மற்றும், மழைபரவலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.
- பொதுவாக மழைப்பொழிவு நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் அதிகமாகவும், துருவப்பகுதிகளை நோக்கிச் செல்லச்செல்ல மழையின் அளவு குறைகிறது.
- பூமத்திய ரேகைப் பகுதியில் நிலவும் அதிக வெப்பநிலையே வெப்பச்சலன மழைப்பொழிவுக்கு முதன்மைக் காரணியாக விளங்குகிறது, இதுவே அப்பகுதியை மிகவும் ஈரமான மண்டலமாக ஆக்குகிறது.

131. **விடை: B**

- மழைப்பொழிவு அளவிடப்படுவது – மழைமானி மூலம்
- குறைந்த காற்றழுத்த அமைப்புகள் – காற்றழுத்தத் தாழ்வுநிலை
- அதிக காற்றழுத்த அமைப்பு – எதிர்ச் சூறாவளி
- கடல் மட்டத்தில் உள்ள நிலையான காற்றழுத்தம் – 101.325 பார்

132. **விடை: C**

- நாம் விமானத்தில் மேலே செல்லும்பொழுது வளிமண்டல அழுத்தமானது நம்முடைய காதுகளில் உள்ள காற்றின் அழுத்தத்தை விட குறைவாக உள்ளது.
- ஆதலால் காதுகள் இவ்விரண்டையும் சமப்படுத்தும் பொழுது அடைத்துக் கொள்கின்றன.
- இந்நிகழ்வு விமானத்தில் இருந்து கீழே இறங்கும்பொழுதும் நிகழ்கின்றன.

133. **விடை: A**

- ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் காற்றில் உள்ள நீராவியின் அளவு ஈரப்பதம் என அழைக்கப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY

- இது வளிமண்டலத்தின் தொகுதியில் 0 - 5% வரை இருக்கும். ஈரப்பதம் வளிமண்டலத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- வளிமண்டலத்தில் ஈரப்பத்தின் அளவு வெப்பநிலையின் அளவை பொறுத்து அமைகிறது.
- அதனால் ஈரப்பதத்தின் அளவு நிலநடுக்கோட்டிலிருந்து துருவத்தை நோக்கிச் செல்லும்போது குறைகிறது.

134. **விடை: A**

- நீரியல் சுழற்சி சூரிய உந்துதல் செயலாக்கத்தால் நடைபெறும் உலகளாவிய நிகழ்வு. நீர் கடலிலிருந்து ஆவியாதல் மூலம் வளி மண்டலத்திற்குச் சென்று, பின் வளி மண்டலத்திலிருந்து மழைப்பொழிவாக நிலத்திற்கும், நிலத்திலிருந்து நீராக கடலுக்கும் சென்றடைகிறது.
- நீர்ச் சுழற்சியில் உள்ளாகும் நீரின் அளவு மாறாதது. இது நீர்பரவல், இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடும். ஆவியாதல் புவியின் மேற்பரப்பில் காணப்படும் நீரின் மூலமாகவும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல் மூலமும் நடைபெறுகிறத.

135. **விடை: D**

**நீரியல் சுழற்சியில் ஆறு முக்கிய கூறுகள் உள்ளன.**

- **அவை:**
  - ஆவியீர்ப்பு
  - திரவமாய் சுருங்குதல்,
  - பொழிவு,
  - நீர் ஊடுருவல்,
  - உட் கசிதல்
  - நீர் வழிந்தோடல்.

136. **விடை: C**

- ஆவியீர்ப்பு என்பது புவியின் மேற்பரப்பு நீர் நிலைகளில் இருந்து ஆவியாதல் வழியாகவும் மற்றும் தாவரங்களிலிருந்து நீர் உட்கசிந்து வெளியிடுதல்.
- மூலமாகவும் நிகழும் புவியின் மொத்த நீர் இழப்பாகும். விளை நிலப்பகுதிகளில் ஆவியாதல் மற்றும் நீர் உட்கசிந்து வெளியிடுதலைத் தனித்தனியாகக் கணிப்பது கடினம்.
- எனவே, இங்கு அனைத்து நிகழ்வுகளும் ஆவியீர்ப்பு என அழைக்கப்படுகிறது.

137. **விடை: A**

**ஆவியாதல் விகிதம் பின்வருவனவற்றால் அதிகரிக்கிறது:**

- காற்றின் வேகம் அதிகரித்தல்
- வெப்பநிலை அதிகரிப்பு
- ஈரப்பதம் குறைதல் மற்றும்
- பூமியில் நீர் நிலைகள் அதிகரிக்கும் பொழுது.

SHANKAR IAS ACADEMY

138. **விடை: D**

- நீராவி, நீராக மாறும் செயல்முறைக்கு நீர் சுருங்குதல் என்று பெயர்.
- வளிமண்டலத்தில் வெப்பக் காற்று மேலே எழுந்து, குளிர்வடைந்து நீராவியைத் தக்க வைத்து கொள்ளும் திறனை இழக்கும் பொழுது, நீர் சுருங்குதல் நிகழ்வு நடைபெறுகிறது.
- மிகுதியான நீராவி நீர் சுருங்குதலால் மேகத்துளிகளாக மாறுகிறது. இதுவே மேகங்கள் உருவாகக் காரணமாகிறது.
- இம்மேகங்கள் மழைப்பொழிவை உருவாக்குகிறது.
- நீர்ச் சுழற்சியின் மூலம் நீராக புவிப்பரப்பிற்கு மீண்டும் வந்தடைகிறது.
- நீர் சுருங்குதல் ஆவியாதலின் எதிர்வினைச் செயலாகும்.

139. **விடை: D**

**நீதிப்பேராணைகளின் அதிகார வரம்பு:**

- இந்திய அரசியலமைப்பின் 32-வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தாலும், 226-வது சரத்தின் கீழ் உயர் நீதிமன்றங்களாலும் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

140. **விடை: B**

- உயர்நீதிமன்றம் மாநிலங்களின் மிக உயர்ந்த நீதிமன்றமாகும். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர்நீதிமன்றம் உள்ளது.
- எனினும், இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் தங்களுக்கென ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டிருக்கலாம்.
- எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா, மற்றும் சண்டிகர் ஆகியவை ஒரு பொதுவான நீதிமன்றத்தைக் கொண்டுள்ளன.
- உயர்நீதிமன்றம் தனக்கென முதன்மை அதிகார வரம்பு, மேல் முறையீட்டு அதிகார வரம்பு, நீதிப் பேராணை வழங்கும் அதிகார வரம்பு ஆகிய அதிகார வரம்புகளைப் பெற்றுள்ளது.

141. **விடை: A**

- அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்தியாவில் நீதித்துறையினைச் சுதந்திரம் மற்றும் நடுநிலைத்தன்மையுடன் நிறுவினர். நியாயமான நீதி கிடைப்பதற்கு நீதித்துறையின் சுதந்திரம் முக்கியமானதாகும்.
- இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளில் நீதித்துறை குடிமக்களின் உரிமைகளின் பாதுகாவலனாக உள்ளது.
- நம் நாட்டிற்கு எவ்வகையான நீதித்துறை வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் நீதித்துறையை வடிவமைத்துள்ளனர்.

142. **விடை: C**

**பொதுநல வழக்கு (PIL):**

- இது பொதுநலனைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு ஆகும்.
- உச்சநீதிமன்றம் இந்த முறையை அறிமுகப்படுத்தியது. இது ஒரு நபர் தனது வழக்கு தொடர்பான நீதிமன்றத்தை அணுக அனுமதிக்கிறது.
- அடிப்படை மனித உரிமைகள் மீறல், சமய உரிமைகள், மாசுபாடு, மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆகியவற்றிற்காகபொது நல வழக்கை எவரும் தாக்கல் செய்யலாம்.
- இது தொடர்பான எழுதப்பட்ட புகார் கடிதம் மூலம் இவ்வழக்கினைப் பதியலாம்.
- பொது நல வழக்கு என்ற கருத்து இந்திய நீதித்துறைக்குப் புதிதான ஒன்றாகும்.



SHANKAR IAS ACADEMY

143. **விடை: B**

- சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம் (saeculum) என்பதிலிருந்து பெறப்பட்டது.
- **இதன் பொருள் காலம் (an age) அல்லது உள்ளுணர்வு காலம் (the spirit of an age) ஆகும்.**

144. **விடை: B**

- காற்று நீர் சுருங்குதல் என்பது நீராவி காற்றில் செறிந்து பூரித நிலையை அடைவது.
- வெப்பக்காற்று குளிர்ந்த காற்றை விட அதிக நீராவியைத் தக்க வைத்துக் கொள்ளும்
- வெப்ப நிலை குறையும் பொழுது காற்று பூரித நிலையை அடைகிறது.

145. **விடை: A**

- மழைப்பொழிவு என்பது மேகங்களிலிருந்து பல்வேறு வடிவங்களில் நீராக புவியின் மேற்பரப்பை வந்தடையும் நிகழ்வு ஆகும்.
- பனிப்படிகங்கள் மற்றும் மேகத்துளிகள் ஒன்று கூடிப் பெரியதாகும் பொழுது அவை கனமாவதால் வளிமண்டலத்தின் வழியாக மழையாக வீழ்கிறது.
- அவை கீழ்நோக்கி விழும்பொழுது சிறிய துளிகள் ஒன்றுசேர்ந்து பெரிய அளவிலான மழைத்துளிகளாக விழுகின்றன.

146. **விடை: B**

- **மழை:** மழை என்பது திரவப் பொழிவு; தூறல் என்பது 0.5 மி. மீ-க்கும் குறைவான நீர்த்துளி அளவு கொண்டது.
- **கல்மழை:** இது நீர்த்துளிகள் மற்றும் பனிக்கட்டித் துகள்கள் கலந்த ஒரு மழையாகும்.
- **உறைபனி மழை:** குளிர்ந்த மேற்பரப்பைத் தொட்ட பிறகு மழைநீர் உறைகிறது.
- **ஆலங்கட்டி மழை:** இடி மேகங்களில் உருவாகும் பெரிய பனிக்கட்டி உருண்டைகள் (>5 மிமீ).
- **பனிப்பொழிவு:** தூள் போன்ற பனியாக பனிக்கட்டிப் படிகங்கள் நேரடியாக உருவாகுதல்.

147. **விடை: C**

- **மேல்மட்ட மழை நீர் வழிந்தோடல்:** மழைப் பொழிந்ததவுடன் மழை நீரின் ஒரு பகுதி நீரோடையோடு கலந்து விடுகிறது.
- இது மழைப்பொழிவு அதிகமாவும் நீண்ட காலத்திற்கும் ஊடுருவலை விட அதிகமாக இருக்கும்பொழுதும் ஏற்படுகிறது.
- இந்நிலையில் அதிக நீரானது நிலப்பரப்பில் செரிவடைவதால் அது நிலச்சரிவின் காரணமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதால் நிலநீர் ஓட்டம் எனவும் அறியப்படுகிறது.
- இந்த நிலநீர் ஓட்டம் ஆறுகள், சிறு ஓடைகள் மற்றும் கடல்களில் இணைவதால் இது மேல்மட்ட நீர் வழிந்தோடல் என அழைக்கப்படுகிறது.

148. **விடை: D**

- நிலப்பரப்பின் மீது மழைநீர் நேரடியாகப் பாய்வது நேரடி வழிந்தோடல் அல்லது தரைவழிப் பாய்வு என்று அழைக்கப்படுகிறது, அடிமட்ட நீர் ஓட்டம் அல்ல.
- அடிமட்ட நீர் ஓட்டம் என்பது நீரின் மறைமுகமான அல்லது தாமதமான பாய்வு ஆகும், அதேசமயம் நேரடி வழிந்தோடல் என்பது மழைக்குக் கிடைக்கும் விரைவான எதிர்வினையாகும்



SHANKAR IAS ACADEMY

149. **விடை: B**

**"நலிந்த வேளாண்மை" ஒரு உந்து காரணியாக உள்ளது.**




150. **விடை: D**

| வகை | இழுவை காரணிகள் | உந்து காரணிகள் |
|---|---|---|
| **இயற்கை காரணங்கள்** | மிகக் குறைந்த ஆபத்துள்ள பகுதிகள் | ஆபத்து ஏற்படக்கூடிய பகுதிகள் |
| | சாதகமான காலநிலை | காலநிலை மாற்றம் (தீவிர வானிலை நிகழ்வுகள் உட்பட) |
| | இயற்கை வளங்கள் மற்றும் கனிமங்களின் (எ.கா., நீர், எண்ணெய், யுரேனியம்) மிகுதியான இருப்பு | பயிர் சேதம் மற்றும் உணவுப் பற்றாக்குறை |

151. **விடை: C**

| வகை | (இடம்பெயர்ச்சிக்கான) உந்து காரணிகள் | ஈர்ப்பு காரணிகள் (இடம்பெயர்ச்சிக்கு) |
|---|---|---|
| அரசியல் காரணங்கள் | போர், உள்நாட்டுக் கலவரம் | அரசியல் பாதுகாப்பு |
| | இன, மத, இன அல்லது கலாச்சார துன்புறுத்தல் | சுதந்திரம் மற்றும் விடுதலை |
| | பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகள் | பாதுகாப்பு |



SHANKAR IAS ACADEMY

| | | |
|---|---|---|
| | குறைவான அல்லது பற்றாக்குறையான நகர்ப்புற சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதி. எ.கா. சுகாதாரம், கல்வி, பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்றவை | மலிவான மற்றும் எளிதில் அணுகக்கூடிய நகர்ப்புற சேவைகள் (சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, பொழுதுபோக்கு) |

152. **விடை: A**

- Brain Drain என்பது பின்தங்கிய நாடுகளைச் சார்ந்த தொழிற்திறன் கொண்ட மக்கள் சிறந்த வேலை வாய்ப்புகளைத் தேடி வளர்ந்த நாடுகளுக்குச் செல்கின்றனர்.
- இது இடம்பெயர்வின் ஒரு முக்கிய விளைவாகும். இதன் விளைவாக பூர்வீக பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைகின்றன.
- இது 'அறிவுசார் வெளியேற்ற விளைவு' (Back Wash Effect) என அழைக்கப்படுகிறது.

153. **விடை: A**

**இந்தியாவின் நில அதிர்வு மண்டலங்கள்**

| **நில அதிர்வு மண்டலங்கள்** | **அபாயத்தன்மை** | **பகுதிகள்** |
|---|---|---|
| மண்டலம் 5 | மிக அதிகம் | வடகிழக்கு இந்தியா முழுமையும், ஜம்மு காஷ்மிரின் சில பகுதிகள், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், குஜராத்தின் ரான் ஆப் கட்ச், வட பீகார் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுக் கூட்டங்கள் |
| மண்டலம் 4 | அதிகம் | ஜம்மு-காஷ்மீரின் பிற பகுதிகள், இமாச்சலப்பிரதேசம் தேசிய தலைநகரமான புது டெல்லி, வட உத்திரப் பிரதேசம், பீகார், சிக்கிம், மேற்கு வங்கம், குஜராத்தின் சில பகுதிகள், மேற்கு கடற்கரையை ஒட்டி உள்ள மகாராஷ்டிராவின் சில பகுதிகள் மற்றும் இராஜஸ்தான் |
| மண்டலம் 3 | மிதமானது | கேரளா, கோவா, இலட்சத்தீவுகள், உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள், குஜராத் மற்றும் மேற்கு வங்காளம், பஞ்சாபின் சில பகுதிகள், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா |
| மண்டலம் 2 | குறைவு | நாட்டின் பிற பகுதிகள் |

SHANKAR IAS ACADEMY

154. **விடை: D**

**வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள்:**

- **வானிலையியல் காரணிகள்**
  - கனமழை
  - அயன மண்டல சூறாவளிகள்
  - மேக வெடிப்பு
- **இயற்கைக் காரணிகள்**
  - பரந்த நீர் பிடிப்பு பகுதிகள்
  - **போதிய வடிகால் அமைப்பு இல்லாமை**
- **மனித காரணிகள்**
  - காடழிப்பு
  - வண்டல் படிவுகள்
  - முறையற்ற வேளாண்முறைகள்
  - முறையற்ற நீர் பாசன முறைகள்
  - அணைகள் உடைதல் மற்றும் நகரமயமாக்கல்

155. **விடை: B**

- **வளிமண்டலத்தில்** குறைந்த காற்றழுத்த பகுதிகளில் சுழலும் வலிமையான காற்றே சூறாவளி புயல் காற்று எனப்படும்.
- இப்புயல் காற்று வட அரைக்கோளத்தில் கடிகாரம் சுற்றும் திசைக்கு எதிர் திசையிலும் தென் அரைக் கோளத்தில் கடிகார திசையிலும் சுழல்கிறது.

156. **விடை: C**

- வானிலையியல் வறட்சி: ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழையின் அளவு ஒரு குறிப்பிடப்பட்ட அளவை விட குறைவாக பெய்திருக்கும் சூழலையே வானிலையியல் வறட்சி எனப்படும்.
- நீரியியல் வறட்சி: நீரோடைகள், ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைந்து காணப்படும் சூழல் நீரியியல் வறட்சி எனப்படுகிறது. இவை இரண்டு வகைப்படும்: அவை அ) புவி மேற்பரப்பு நீர் வறட்சி ஆ) நிலத்தடி நீர் வறட்சி.
- வேளாண் வறட்சி: மழை பற்றாக்குறை காரணமாக வேளாண் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறிப்பது வேளாண் வறட்சியாகும்.

157. **விடை: D**

- இந்தியாவில் சுமார் 15 சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதிகளாகும். இமயமலைச் சரிவுகள், மேற்கு தொடர்ச்சி மலைச்சரிவுகள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் நிலச்சரிவுகள் அதிகம் காணப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் கொடைக்கானல் (திண்டுக்கல் மாவட்டம்) மற்றும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) பகுதிகள் நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

158. **விடை: C**

- சுனாமி என்ற வார்த்தை ஜப்பானிய சொல்லான (சு – துறைமுகம்) (நாமி – அலை) என்பதிலிருந்து பெறப்பட்டது. அதாவது (துறைமுக அலை).

SHANKAR IAS ACADEMY

159. **விடை: D**

**பின்வருபவை முக்கிய அபாயகரமான கழிவுகள் ஆகும்:**

- **கதிரியக்கப் பொருள்:** அணுமின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் பயன்படுத்தா எரிபொருள் குழாய்கள்.
- **இரசாயனங்கள்:** செயற்கை கனிமப் பொருட்கள், கரிம உலோகங்கள், உப்புகள், அமிலங்கள், வெடி உப்பு, காரங்கள் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் வெடி மருந்துகள்.
- **மருத்துவக் கழிவுகள்:** பயன்படுத்தப்பட்ட ஊசிகள், கட்டுத் துணிகள், காலாவதியான மருந்து பொருட்கள்.
- **எளிதில் தீப்பற்றக் கூடிய கழிவுகள்:** கரிம கரைப்பான்கள், எண்ணெய்கள், குழைமையூட்டிகளாகிய உருக்குலைக்கும் பொருட்கள் (Plasticisers) மற்றும் கரிம சகதிகள்.

160. **விடை: A**

- **முதன்மை மாசுபடுத்திகள்:**
  - சல்பர் டைஆக்சைடு
  - நைட்ரஜன் ஆக்சைடு
  - கார்பன் டைஆக்சைடு
  - துகள்ம பொருட்கள்
  - மற்ற முதன்மை மாசுபடுத்திகள்.

161. **விடை: C**

- கார்பன் ஆக்சைடுகள் ($CO_2$) முதன்மை மாசுபடுத்திகளே தவிர, இரண்டாம் நிலை மாசுபடுத்திகள் அல்ல.
- சூரிய ஒளியில் உள்ள நைட்ரஜன் ஆக்சைடுகள் மற்றும் ஹைட்ரோகார்பன்கள் போன்ற முதன்மை மாசுபடுத்திகள் ஒன்றோடொன்று வினைபுரிவதால் உருவாகும் இரண்டாம் நிலை மாசே புகைமூட்டம் ஆகும்.

162. **விடை: B**

- முதன்மைப் பொருளாதார நடவடிக்கைகள் (எ.கா., கச்சா பருத்தி உற்பத்தி)
- இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் (எ.கா., நூற்பாலை)
- மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கைகள் (எ.கா. வர்த்தகம், போக்குவரத்து)
- நான்காம் நிலைச் பொருளாதார நடவடிக்கைகள் (எ.கா. வங்கித் துறை)
- ஐந்தாம் நிலைச் பொருளாதார நடவடிக்கைகள் (எ.கா. நீதித்துறை)

163. **விடை: A**

- நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம், இந்தியக் குடியுரிமை எனும் ஒற்றைக் குடியுரிமையை மட்டுமே வழங்குகிறது.
- ஆனால், அமெரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற கூட்டாட்சி மாநிலங்களில் இரட்டைக் குடியுரிமை உள்ளது. (தேசியக் குடியுரிமை மற்றும் மாநிலக் குடியுரிமை).
- இந்தியாவில், குடிமக்கள் எந்த மாநிலத்தில் பிறந்திருந்தாலும் அல்லது வசித்தாலும், நாடு முழுவதும் ஒரே மாதிரியான அரசியல் மற்றும் குடியுரிமை உரிமைகளை அனுபவிக்கின்றனர்.

SHANKAR IAS ACADEMY

164. **விடை: D**

**நமது அரசியலமைப்பு இந்தியக் குடிமக்களுக்குப் பின்வரும் உரிமைகளை வழங்குகிறது.**

- அடிப்படை உரிமைகள்
- மக்களவை மற்றும் மாநில சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை
- சில பொதுப் பதவிகளை வகிக்கும் உரிமை
- நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினராகும் உரிமை.

165. **விடை: B**

- **வெளிநாடு வாழ் இந்தியர்:** இந்திய கடவுச்சீட்டினைப் பெற்று வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமகன்.
- **வெளிநாட்டு குடியுரிமைக் கொண்ட இந்தியாவில் வசிப்பதற்க்கான அட்டை வைத்திருப்பவர்:** இந்தியாவை பூர்விகமாகக் கொண்ட வெளிநாட்டில் குடியுரிமை (பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நீங்கலாக) காலவரையின்றி
- இந்தியாவில் வசிப்பதற்க்கும் பணி செய்வதற்கும் OCI அட்டை பெறுகிறார்
- OCI அட்டை வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை.
- இந்திய பூர்விக குடியினர்: இந்திய குடியுரிமை உடைய மூதாதையர்களைக் கொண்ட வெளிநாட்டில் குடியுரிமை (பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, பூட்டான், ஆப்கானிஸ்தான், சீனா மற்றும் நேபாளம் தவிர) பெற்றிருக்கும் ஒருவர் இந்திய பூர்விக குடியினர் ஆவர்

166. **விடை: C**

- இந்தச் சூழ்நிலையில், **1945 அக்டோபர் 24** அன்று நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை (UNO) என்ற சர்வதேச அமைப்பு இந்தப் பிரச்சினையை கவனம் செலுத்தியது.

167. **விடை: D**

- இந்த அறிவிப்பு பிரான்சின் பாரிஸ் நகரில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையால் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது (பொதுச் சபை தீர்மானம் 217A).
- இதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் **டிசம்பர் 10 ஆம் தேதி மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.**

168. **விடை: A**

- PIO என்பது இந்திய பூர்விக குடியினர் என்பதைக் குறிக்கிறது.
- NRI என்பது வெளிநாடு வாழ் இந்தியர் என்பதைக் குறிக்கிறது.
- OCI என்பது வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட இந்தியாவில் வசிப்பதற்க்கான அட்டை வைத்திருப்பவர் என்பதைக் குறிக்கிறது.

169. **விடை: A**

- இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலைகளும், சர்க்கரைத் தொழிற்சாலைகளும் முறையே இரும்புத் தாது மற்றும் கரும்பு கிடைக்கும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளன.
- இரும்பு எஃகு ஆலையானது இரும்புத் தாது கிடைக்கும் கஞ்சமலைக்கு அருகில் அமைந்துள்ளது.



SHANKAR IAS ACADEMY

170. **விடை: D**

➢ புவியியல் காரணிகள்: மூலப்பொருட்கள், நிலம், நீர் வளம், மனித சக்தி, ஆற்றல் வளம், போக்குவரத்து மற்றும் சந்தை.

171. **விடை: C**

➢ வேளாண் சார்ந்த தொழிலங்கள் - பால் உற்பத்திப் பொருட்கள்
➢ கனிமவளம் சார்ந்த தொழிற்சாலைகள் - சிமெண்ட் தொழிற்சாலை
➢ கடல்வளம் சார்ந்த தொழிலங்கள் - பதப்படுத்தப்பட்ட கடல்சார் உணவு
➢ வனவளம் சார்ந்த தொழிலங்கள் - மரக்கூழ் மற்றும் காகித உற்பத்தி

172. **விடை: D**

- HAL – Hindustan Aeronautics Limited
- BHEL – Bharat Heavy Electricals Ltd
- SAIL – Steel Authority of India Ltd
- AMUL – Anand Milk Union Limited

173. **விடை: A**

➢ இவ்வகையான தொழில்கள், அரசாங்கம் மற்றும் தனிநபர்கள் அல்லது தனி குழுவாகவோ கூட்டாக இணைந்து இயக்கப்படுகின்றன.
➢ உதாரணம்: இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம், இந்தியன் சிந்தட்டிக் ரப்பர் நிறுவனம்

174. **விடை: C**

➢ உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டு அறிக்கையானது ஜெர்மன்-வாட்ச் என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

175. **விடை: D**

➢ **இந்தியாவில் நீர் மாசுபாட்டிற்கான முக்கிய காரணங்கள்:**

- நகரமயமாக்கல்
- தொழிற்சாலைக் கழிவுகள்
- கழிவுநீர்
- வேளாண்மை நிலங்களில் நீர் வழிந்தோடல் மற்றும் முறையற்ற விவசாய நடைமுறைகள்
- கடல்நீர் ஊட்புகுதல்
- திடக்கழிவுகள்.

176. **விடை: B**

➢ நீர் உட்கசிதல் என்பது மண்ணில் உள்ள துகள்களுக்கு இடையே மெதுவாக கீழ் நோக்கி ஊடுருவும் நீர்.



SHANKAR IAS ACADEMY

177. **விடை: D**

- **ஒரு நீர்ப்படுகையானது நீர் ஊடுருவக்கூடியதாக** இருக்க வேண்டும்; அதாவது, அதன் வழியே நீர் பாய்வதற்கு அனுமதிக்கும் துளைகள் அல்லது பிளவுகளை அது கொண்டிருக்க வேண்டும்.
- முற்றிலும் நீர் புகாத பாறை அடுக்கு (திடமான, பிளவுபடாத கிரானைட் அல்லது அடர்த்தியான களிமண் போன்றவை), நீரைத் உட்கொள்வதற்குப் பதிலாக அதன் இயக்கத்தைத் தடுப்பதால், **நீர் புகா அடுக்கு அல்லது நீர் தடை அடுக்கு என்று அழைக்கப்படுகிறது.**

178. **விடை: B**

- நீர் சுருங்குதலே மேகங்கள் உருவாவதற்குக் காரணமாகும்.
- இந்த மேகங்கள் மழைபொழிவை உருவாக்குகின்றன, இது நீர் சுழற்சியின் மூலம் நீராக புவிப்பரப்பிற்கு மீண்டும் வந்தடைகிறது
- ஆவியாதலுக்கு எதிர்வினைச் செயலாகும்.

179. **விடை: C**

- நீர் உட்கசிந்து வெளியிடுதல் என்பது தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்க்கு செல்லும் செயலாக்கத்தைக் குறிக்கிறது.

180. **விடை: D**

- உலகிலேயே முதன் முதலாக காலநிலை வரைபடங்களின் தொகுப்பைத் அல்- பலாஹி, என்ற அரேபிய நாட்டு புவியியல் வல்லுநர் அரேபியா நாட்டு பயணிகளிடமிருந்து காலநிலை பற்றிய விவரங்களைச் சேகரித்து, வெளியிட்டார்.

181. **விடை: C**

- **எதிர் சுழற்சி என்பவை காற்றுச் சுழற்சியானது வளர்ச்சியடைந்து** கரடுமுரடான நிலப்பகுதி, கட்டிடங்கள், மலைகள் மற்றும் தடுப்புகளின் மீதோ அல்லது அருகாமையிலோ வீசும் போது **சுழல் காற்று** உருவாகிறது.
- சமமற்ற பரப்புகளில் காற்றின் ஓட்டம் தடைபடும்போது இவை உருவாகின்றன.
- **சாதாரண காற்றோட்டத்தில்** ஏற்படும் ஒழுங்கற்ற தன்மைகளால் இவை ஏற்படுகின்றன.
- **வியாபாரக் காற்றுகள் என்பவை பெரிய அளவிலான உலகளாவிய காற்று அமைப்புகளாகும்,** சுழல் காற்றுகளைப் போன்ற சிறிய அளவிலான உள்ளூர் சுழற்சிகள் அல்ல.

182. **விடை: A**

- செங்குத்தாக நகரும் வாயுவிற்கு காற்றோட்டம் என்று பெயர். காற்று எப்பொழுதும் உயர் அழுத்த பகுதியிலிருந்து குறைந்த அழுத்த பகுதியை நோக்கி வீசும்.
- காற்றால் உருவாக்கப்படும் சுழல் காற்று மற்றும் கடும் காற்றை உணர மட்டுமே முடியுமே தவிர, பார்க்க முடியாது.

SHANKAR IAS ACADEMY

183. **விடை: A**

- காற்றின் அழுத்தம் குறையும்போது, காற்றில் சுவாசிப்பதற்கான ஆக்ஸிஜனின் அளவும் குறைகிறது.
- மிக உயரமான இடங்களில், காற்றில் ஆக்ஸிஜன் அளவும் வளிமண்டல அழுத்தமும் மிகவும் குறைவாக உள்ளதால், அங்கு மனிதர்கள் இறக்கக் கூடும்.
- மலை ஏறுபவர்கள் மிக உயரமான சிகரங்களில் ஏறும்போது ஆக்ஸிஜன் உருளையில் அடைத்து எடுத்து செல்கின்றனர். அவர்கள் சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்டு அதிக உயரங்களுக்கு தம்மை பழக்கப் படுத்திக்கொள்கின்றனர்
- ஏனெனில் அழுத்தம் அதிகமான இடங்களிலிருந்து அழுத்தம் குறைவான இடங்களுக்கு செல்லும் போது மூச்சுதிணறல் ஏற்படும்.

184. **விடை: C**

- பூமியின் மேற்பரப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மேலே உள்ள காற்றின் எடை, வளிமண்டல அழுத்தம் அல்லது காற்றழுத்தம் என்று அழைக்கப்படுகிறது.
- காற்றின் அழுத்தம் காற்றழுத்தமானியால் (பாரோமீட்டர்) அளவிடப்படுகிறது.

185. **விடை: D**

- அதிகபட்ச வெப்பநிலை வழக்கமாக பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை பதிவாகிறது மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை **சூரிய உதயத்திற்கு** முன்பு அதிகாலை 4 மணியளவில் பதிவாகிறது.

186. **விடை: C**

- வெப்பநிலை கிடைமட்டமாகவும் செங்குத்தாகவும் மாறுபடுகிறது.
- வளிமண்டலத்தின் அடியடுக்கில் (ட்ரோபோஸ்பியர்) உயரம் அதிகரிக்க அதிகரிக்க வெப்பநிலை குறைகிறது, அதாவது ஒவ்வொரு 1000 மீட்டருக்கும் 6.5 டிகிரி செல்சியஸ் குறைந்து கொண்டே செல்கிறது இதனை வெப்ப குறைவு வீதம் என்று அழைக்கப்படுகிறது.

187. **விடை: D**

- மண் வளத்தை பாதுகாப்பதற்காகப் பரவலாகப் பின்பற்றப்படும் செயல்முறைகளாவன: காடு வளர்ப்பு, மேய்ச்சலை கட்டுப்படுத்துதல், அணைகளளை கட்டுதல், பயிர் சுழற்சி முறை, பட்டை முறை வேளாண்மை, நிலத்தில் சம உயரத்திற்கு ஏற்ப உழதல், படிக்கட்டு முறை வேளாண்மை, இடப்பெயர்வு வேளாண்மை யைக் தடுத்துதல்.

188. **விடை: C**

- இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955**, டிசம்பர் 30, 1955 அன்று அமலுக்கு வந்தது**.
- இந்தியக் குடியுரிமையைப் பெறுதல், வரையறுத்தல் மற்றும் அதனை இழத்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக இது நிறைவேற்றப்பட்டது.

189. **விடை: C**

- **2015 ஜனவரி 9** முதல் இந்திய பூர்விக குடியினர் (PIO) முறையானது இந்திய அரசால் திரும்பப் பெறப்பட்டு, வெளிநாட்டுக் குடியுரிமை கொண்ட இந்தியாவில் வசிப்பதற்க்கான அட்டை வைத்திருப்பவர் (OCI) **முறையுடன்** இணைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY

190. **விடை: B**

- இந்த நாள் (ஜனவரி 9), மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்ததை நினைவுகூருகிறது.

191. **விடை: C**

- இந்தியா பல்வேறு நம்பிக்கைகளைச் சமமாகப் போற்றி மதிக்கப்படும், இடமாக இருப்பதோடு ஒரே தேசியக் கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கும். - ஜவஹர்லால் நேரு

192. **விடை: B**

- ஆங்கிலேய செய்தித்தாள் ஆசிரியரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் 'மதச்சார்பின்மை' என்ற சொல்லை உருவாக்கினார்.

193. **விடை: B**

- கஜுராஹோவில் உள்ள 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்து கோயில் ஒன்று வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், பௌத்த ஸ்தூபி மற்றும் முஸ்லிம் பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கபட்டுள்ளது.

194. **விடை: D**

- சிக்கந்தராவில் அமைந்துள்ள அக்பரின் கல்லறையில், இஸ்லாம் மற்றும் இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் இடம்பெற வேண்டும் என அக்பர் வலியுறுத்தியிருத்தினார்.

195. **விடை: C**

- இந்திய தண்டனைச் சட்டத்தின் 304A பிரிவின் கீழ், ஓட்டுநரின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவாக ஓட்டுவதால் ஏற்படும் மரணம் தொடர்பான குற்றங்களுக்காக ஓட்டுநர் மீது காவல்துறை மேற்கூறிய பிரிவின் கீழ் ஒரு கிரிமினல் குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய நேரிடும்.

196. **விடை: B**

- சேது பாரதம் தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற பயணத்திற்காக பாலங்கள் கட்டுவதற்க்கான திட்டமானது, 2016-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 2019-ஆம் ஆண்டுக்குள் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும் இருப்பு பாதை குறுக்கீடு இல்லாமல் உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

197. **விடை: C**

- இந்திய ஆயுதப் படைகள் – இவை நாட்டின் இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைப் படைகளாகும். இவை பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் பணியாற்றுகிறார்கள்.
- துணை ராணுவப் படைகள் – அவை அசாம் ரைபிள்ஸ் மற்றும் சிறப்பு எல்லைப்புறப் படை ஆகும்.
- மத்திய ஆயுதக் காவல் படைகள் – அவை BSF, CRPF, ITBP, CISF மற்றும் SSB ஆகும். இவை உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.
- CAPF, என்ற படைபிரிவுகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிக்கு ஏற்றவாறு இராணுவம் மற்றும் காவல்துறை ஆகிய இரு தரப்பினருடனும் இணைந்து செயல்படுகிறது.



SHANKAR IAS ACADEMY

198. **விடை: B**

- இந்திய விமானப்படையில் ஐந்து நட்சத்திரப் அந்தஸ்து கொண்ட' மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி அர்ஜன் சிங் ஆவார்.

199. **விடை: A**

- உள்நாட்டுப் பாதுகாப்பைப் பாராமரிக்கவும், கடலோரப் பகுதியைப் பாதுகாப்பதற்கும், இராணுவத்திற்கு உதவுவதற்கும் துணைபுரியும் படைகள் "துணை இராணுவப் பாதுகாப்பு படைகள்" என அழைக்கப்படுகின்றன.
- ரயில் நிலையங்கள், எண்ணெய் வயல்கள் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கக் குழாய்கள் போன்ற முக்கிய இடங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே இதன் பொறுப்பாகும்.

200. **விடை: C**

- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5 ஆம் தேதி உலக மண் தினம் அனுசரிக்கப்படுகிறது.

*********

SHANKAR IAS ACADEMY